# தத்துவங்கள்

என்னதான் மீனுக்கு நீச்சல் தெரிந்தாலும் அதால மீன்குழம்புல நீந்த முடியாது.

கால்வாய்ல கால் வைக்க முடியும் ஆனால் வாய்க்கால்ல வாய் வைக்க முடியுமா?

பஸ்ல நீ ஏறினாலும் பஸ் உன் மேல ஏறினாலும் டிக்கெட் வாங்குறது நீதான்.

டிக்கெட் வாங்கிட்டு உள்ள போனா அது சினிமா தியேட்டர் ஆனால் உள்ள போய்ட்டு டிக்கெட் வாங்கினா அது ஆபரேசன் தியேட்டர்.

டிரெயினுக்கு டிக்கெட் வாங்கி ப்ளாட்பாரத்தில உட்காரலாம் ஆனால் ப்ளாட் பாரத்திற்கு டிக்கெட் வாங்கி டிரெயின்ல உட்கார முடியாது.

இரயில்வே ஸ்டேஸன்ல போலீஸ் இருக்கலாம் ஆனால் போலீஸ் ஸ்டேஸன்ல இரயில் இருக்க முடியாது.

ஆம்பிள்ளைங்க அடிபட்டா ஆம்புலன்ஸ் வரும் பொம்பளைங்க அடிபட்டா பொம்புலன்ஸ் வருமா?

லஞ்ச் பேக்ல லஞ்ச எடுத்துட்டுப் போகலாம் ஆனால் ஸ்கூல் பேக்ல ஸ்கூல எடுத்துட்டுப் போக முடியாது.

டூல் பாக்ஸ்ல டூல பார்க்க முடியும் ஆனால் மேட்ச்பாக்ஸ்ல மேட்ச்ச பார்க்க முடியுமா?

பச்சைமிளகாய்ல பச்சை இருக்கும் ஆனால் குடைமிளகாய்ல குடை இருக்குமா?

ஸவுத் இந்தியால நார்த்தங்காய் கிடைக்கும் ஆனால் நார்த் இந்தியால சவுத்தங்காய் கிடைக்குமா?

மெழுக வச்சி மெழுகுவர்த்தி செய்யலாம் ஆனால் கொசுவ வச்சி கொசுவத்தி செய்ய முடியாது.

கோவில் மணிய நாம அடிச்சா சத்தம் வரும் ஆனால் கோவில் மணி நம்ம அடிச்சா இரத்தம்தான் வரும்

பேண்ட் போட்டு மொட்டி போட முடியும் ஆனால் மொட்டி போட்டு பேண்ட் போட முடியாது.

குவாட்டர் அடிச்சிட்டு குப்பற படுத்துக்கலாம் ஆனால் குப்பற படுத்துக்குட்டு குவாட்டர் அடிக்க முடியுமா?

ஃகீ ரோஸ்ட்ல ஃகீ இருக்கும் ஆனால் பேப்பர் ரோஸ்ட்ல பேப்பர் இருக்காது.

சோடாவ கூலர்ல வச்சா அது கூலிங்சோடா அதுக்காக அத வாசர்ல வச்சா வாசிங்சோடாவாகாது.

தண்ணீர தண்ணின்னு சொல்லலாம் அதுக்காக பன்னீர பன்னின்னு சொல்ல முடியாது.

அண்ணன் ஃஒய்ப்ப அண்ணின்னு கூப்பிடலாம் ஆனால் தம்பி ஃஒய்ப்ப தண்ணின்னு கூப்பிட முடியாது.

சிற்பி கல்ல உளியால அடிச்சா அது கலை. நாம சிற்பிய உளியால அடிச்சா அது கொலை.

பால்கோவாவை பால்ல செய்யலாம் அதுக்காக ரசகுல்லாவை ரசத்தால செய்ய முடியாது

காதல் கொண்டேன் படத்துல தேவதை கண்டேன் பாட்டு இருக்கு ஆனால் தேவதை கண்டேன் படத்துல காதல் கொண்டேன் பாட்டு இருக்கா?

இன்று தூங்கினால் நாளை எழுந்திருக்கலாம் ஆனால் நாளை தூங்கினால் இன்று எந்திரிக்க முடியாது.

பஸ்ல கலெக்டரே ஏறினாலும் முதல் சீட்டு ட்ரைவருக்குத் தான்

சைக்கிள்கேரியர்ல டிபனை வச்சி எடுத்துட்டுப் போகலாம் டிபன்கேரியர்ல சைக்கிளை வச்சி எடுத்துட்டுப்போகமுடியுமா?

க்ரீம் பிஸ்கட்ல க்ரீம் இருக்கும் ஆனால் நாய் பிஸ்கட்ல நாய் இருக்குமா?

ஒரு எரும்பு நினைச்சா 1000 யானையைக் கூட கடிக்க முடியும் ஆனால் 1000 யானை நினைச்சாலும் ஒரு எரும்ப கூட கடிக்க முடியாது.

ஃபேனுக்கும் இறக்கை இருக்கு பறவைக்கும் இறக்கை இருக்கு. ஃபேனால பறக்க முடியாது, பறவையால சுத்த முடியாது. ஃபேன அமுக்குனா சுத்தும். பறவைய அமுக்குனா கத்தும். இதுதான் உலகம்

செல்லுல பேலண்ஸ் இல்லன்னா கால் பண்ண முடியாது ஆனால் மனுசனுக்கு கால் இல்லன்னா பேலண்ஸ் பண்ண முடியாது.

தண்ணீல மீன் இருப்பதால தண்ணீ நான்-வெஜ் ஆகாது.

நடந்து போனா கால் வலிக்கும் ஆனால் கால் வலிச்சா நடக்க முடியாது.